**செய்தி வெளியீடு எண்: 304** **நாள்: 30.04.2020**

கடந்த நாற்பது ஆண்டுகளாக "ஆவின்" எனும் வணிகப் பெயர் தமிழகத்தின் அனைத்து குடும்பகளிலும் பிரபலமாக உச்சரிக்கப்படும் பெயராக உள்ளது. ஆவின் நிறுவனம் கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவீன் நிறுவனம் 4.60 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு 31.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 24.50 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது.

ஆவின் நிறுவனம் வெண்ணெய், நெய், பால்கோவா, நறுமண பால், ஐஸ் கிரீம் போன்ற பால் உபபொருட்களை சென்னை மாநகரில் அமைந்துள்ள 50க்கும் மேற்பட்ட ஆவின் பாலகங்களில் மூலம் விற்பனை செய்து வருகிறது. இதில் 21 பாலகங்கள் குளிர் சாதன வசதி, சிறுவர் விளையாட்டு பூங்கா, Wi-Fi வசதி போன்ற வசதிகளுடன் அதிநவீன பாலகங்களாக (Hi-Tech Parlour) இயங்கி வருகின்றன.

தற்போது உள்ள அசாதாரண சூழ்நிலையில் அதிநவீன பாலகங்களின் மூலம் நுகர்வோர் இல்லங்களுக்கு பால் மற்றும் பால் உபபொருட்கள் விநியோகம் செய்வதற்காக **ZOMATO** மற்றும் **DUNZO** நிறுவனங்களுடன் ஆவின் நிறுவனமும் இணைந்து சேவை செய்ய ஒப்பந்தம் மேற்கொண்டு அதை சென்னையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளது. இதர மாவட்ட ஒன்றியங்களிலும் மேற்கண்ட சேவையினை விரைவில் அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த சேவை பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. மேலும் இந்த சேவையின் மூலமாக ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள்

சிரமமின்றி கிடைப்பதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர் இந்த சேவையின் மூலமாக தினமும் 7 முதல் 8 லட்சம் வரை விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும் இதனை தொடர்ந்து தற்போது **SWIGGY** உடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படியில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர் இல்லங்களுக்கு **ZOMATO**, **DUNZO, SWIGGY** நிறுவனங்கள் மூலமாக நேரடியாக விநியோகம் செய்யப்படுகின்றன.

**அசாதாரண சூழ்நிலையில் ஆவினின் சேவைகள்**

- தற்போது உள்ள ஊரடங்கிலும் ஆவின் மூலமாக புதியதாக 101 புதிய சங்கங்கள் நிறுவியுள்ளோம் 76 செயலிழந்த சங்கங்களை புதுப்பித்துள்ளோம்
- 378 தற்காலிக பால் கொள்முதல் நிலையங்கள் நிறுவியுள்ளோம்.
- விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு , சில தனியார் பால் கொள்முதல் நிறுத்தப்பட்ட நிலையில் 12767 விவசாயிகளின் பாலினை ஆவின் மூலமாக கொள்முதல் செய்ய அவர்களை ஆவினுடன் இணைத்துள்ளோம்
- சுமார் 9943MT கால்நடை தீவனத்தை பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் வழங்கியுள்ளோம்.
- சுமார் 206 ஆவின் சார்ந்த கால்நடை மருத்துவர்கள் விவசாயிகளின் இல்லத்திற்கே சென்று நேரடியாக கால்நடைகளுக்கு மிக சிறப்பான முறையில் மருத்துவ சிகிச்சை வழங்கி வருகின்றனர். ஆவின் மூலம் கால்நடைகளுக்கு 1,10,599 செயற்கை முறை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் 34621 கன்றுகள் பிறந்துள்ளன.
- எனவே தற்போது நாளொன்றுக்கு சுமார் 4.00 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் அதிகரித்துள்ளது.

- விற்பனை பிரிவு மூலமாக முகவர்கள் நியமனத்தொகை ரூ. 10,000/– லிருந்து ரூ. 1000/– ஆக குறைத்ததன் அடிப்படையில் தற்போது 326 சில்லறை விற்பனையாளர்களை ஆவின் முகவர்களாக தமிழகம் முழுவதும் நியமனம் செய்து அவர்கள் மூலமாக ஆவின் சார்ந்த பால் மற்றும் பால் உபபொருட்கள் தங்கு தடையின்றி விற்பனை செய்து வருகிறோம். மேலும் அனைத்து சிறு வியாபாரிகளை அணுகி ஆவின் முகவர்களாக நியமிக்க முழு முயற்சி செய்து வருகிறோம்.
- நுகர்வோர் குறைகளை உடனுக்குடன் சரி செய்து வருவதால் நுகர்வோருடைய நன்மதிப்பை பெற்றுள்ளோம்.

மேலும் தற்பொழுது ஊரடங்கு நிலவி வரும் நிலையில் சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள பொது மக்களுக்கு எவ்வித சிரமுமின்றி பால் மற்றும் பால் உபபொருட்கள் கிடைக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் பொது மக்கள் **SWIGGY** மூலமாகவும் நேரடியாக பால் மற்றும் பால் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் எனஆவின் நிர்வாக இயக்குனர் முனைவர். மா. வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

**நிர்வாக இயக்குனர், ஆவின்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**